Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 40—No. 12

CONNEMARA PUBLIC LIBRARY
18 DEC 1967

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 40 | பிலவங்க மார்கழி 1967 டிசம்பர் | இதழ் 12

உள்ளுறை

உள்ளுறை		பக்கம்
மலர் நாற்பது	...	1
உள்ளுறை	...	2
தூபம் மறந்தேன்	...	345
பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார் மணிவிழா வாழ்த்து	...	349
சமாஜத்தின் பங்கு யாது?	...	351
திருக்குறள் போதுமா?	...	354
டாக்டர் அ. சி. செட்டியார் மறைவு	...	356
மதிப்புரை	...	358
சைவப் புலவர் தேர்வு	...	1
இளஞ் சைவப் புலவர் தேர்வு	...	8

பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, மேலக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜப் பொதுக்கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குருநாத முதலி தெருவிலுள்ள சமாஜ அலுவலகத்தில் 23-12-67 சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜ ஆண்டு அறிக்கையையும் இவ்வாண்டு வரவு செலவுக் கணக்குகளையும் ஒப்புக்கொள்ள சமாஜப் பொதுக்கூட்டம் நிகழும். அக்கூட்டத்திற்கு உறுப்பினர் நிறைவெண் இல்லாவிட்டால் மேற்குறித்த பொருள்கள் பற்றி ஒப்புக்கொள்ள அவ்விடத்திலேயே மறுநாள் (24—12—67) ஞாயிற்றுக்கிழமை காலை அதே நேரத்தில் சமாஜ விதிகளின்படி வருபவர்களைக் கொண்டு அக்கூட்டம் நடத்தப்பெறும். பொது உறுப்பினர்கள் யாவரும் வருமாறு கேட்டுக்கொள்ளப்பெறுகிறார்கள்.

159836
R673m 211,N28
31K7

(செயலாளர்)

நம் சமாஜச் சார்பில் மெய்கண்டார் திருநாள் திருமயிலைக் கபாலீச்சுரத்தில் 12—11—67 மாலை 5–30 மணிக்கு சமாஜத் தலைவர் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. புலவர் திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல் அவாகள் "மெய்கண்டாரும் சிவஞான போதமும்" என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள்.

நம் சமாஜச் செயற்குழு உறுப்பினர் திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார் அவர்கள் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு திருமயிலை கபாலீச்சுரத்தில் 12—11—67 மாலை 5-30 க்குமேல் சைவப் பெரியார் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் திருக்கோயில் வழிபாடும் பாராட்டுவிழாவும் நிகழ்ந்தன. சமாஜச் சார்பில் வித்துவான் வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் வாழ்த்துப்பா வாசித்தளித்தார்கள். திருகொங்குவேள் மாரிமுத்து அவர்களும் வாழ்த்துப்பா அளித்து வாழ்த்தினார்கள்.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 40 | பிலவங்க ஹு மார்கழி 1967 டிசம்பர் | இதழ் 12

"தூபம்—மறந்தறியேன்"

(ஆசிரியர்)

அக்டோபர் மாத சித்தாந்தம் இதழில் 'ஓர் உண்மைத் திருத்தம்' என்ற தலைப்பில் திரு. ரத்தின சண்முக கங்காதரனர் ஒரு குறிப்பு எழுதியிருக்கிறார். அப்பர் சுவாமிகள் இறைவன் திருவருள் பெற்றுப் பாடிய முதல் பதிகமாகிய 'கூற்றாயினவாறு விலக்கிலீர்' என்ற திருவதிகை வீரட்டானத் திருப்பதிக ஆரும் பாடலில் முதல் அடியில் 'சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்' என்ற தொடரானது, 'பிழைபட்ட பாடமே அன்றி உண்மைப் பாடம் அன்று' எனவும் 'திருநாவுக்கரசு நாயனர் சலம்பூவொடு தூவ மறந்தறியேன்' என்று தான் பாடி அருளினர் என்று துணிந்து கூறலாம்' என்றும் எழுதியிருக்கிறார். பூ தூவுதல் என்பதோடு கூட, நீர் தூவுதல் என்பதற்கும் இலக்கிய வழக்காறு உண்டு என்று கூறிப் பல எடுத்துக் காட்டுக்களும் கூறியுள்ளார். நம் போன்ற மக்கள், திருவருள் பெற்று விளங்கிய சமயாசாரியர்களுடைய சொல்லைத் திருத்துவது சரியன்று என்ற கருத்துடையவர்கள், இது பற்றி இவ்வன்பருடைய கூற்றைச் சிறிது ஆராய்ந்து சில சொற்கூறுவது அவசியம்.

முதலாவது அப்பர் சுவாமிகளுடைய தேவாரம் ஆயி ரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் நாட்டில் பாடப் பெற்றும், ஏட்டு வடிவத்தில் எழுதி வழங்கப் பெற்றும் வந்திருக்கிறது. சென்ற நூற்ருண்டில் வாழ்ந்த சைவப் பெரியார் பலர் மிகச் சிரத்தையோடு இவற்றை ஏட்டிலிருந்து பெயர்த்து அச்சில் வெளியிட்டார்கள் என்பது உண்மை. அவர்கள் மிகுந்த சிரத்தையோடு, கிடைத்த ஏடுகளில் உள்ள பாடத்தை எழுத்தெழுத்தாகப் பார்த்துப் பிரதி செய்தார்கள். மனித இயல்பு காரணமாக, ஏடெழுதிஞேர் பார்த்தெழுதும் போது பிழை ஏற்பட்டிருக்கலாம். பெயர்த்தெழுதிஞேரும் பிழை செய்திருக்கலாம். எனினும் ஆதாரம் கிடைக்காத போது, அருள் நூல்களைத் தாமாகத் திருத்துவது முறையாகாது.

எம்மிடம் அடங்கன் முறை ஏடுகள் ஐந்து உள்ளன. நான்கு பண்முறை, ஒன்று தலமுறை. இந்த ஐந்தையும் இப்போது ஒரு முறை யாம் பரிசோதித்தோம். பாடம் 'தூபமறந்தறியேன' என்றுதான் அனைத்திலும் உள்ளது. ஆதலால் தூவ என்று திருத்துவதற்கு எங்குமே மூல ஆதரவு இல்லை. மேலும் நீர் தூவுதல் என்ற கருத்து தேவாரமெங்கும் காணப்படுகிறது. பின்வரும் உதாரணங்கள் காண்க.

காலம்பெற மலர்நீரவை தூவித் தொழுதேத்தும்
ஞாலம்புக ழடியாருடல் உறுநோய் நலியாவே

சம்பந்தர் 15–9

மிழலையானடி
சென்று பூம்புனல்
நின்று தூவினர்
நன்று சேர்வரே ,, 369–9.

இவ்வாறு நீர் தூவினர் என்றதனாலேயே சலமும் பூவும் தூவ மறந்தறியேன என்று அபபா சுவாமிகள் கூறியதாக நாம் கருத வேண்டுவதில்லை. பூவொடு தூபம் காட்டுதலும் சேர்த்துக் கூறிய இடங்கள் பல திருமுறை

களில் உள்ளன. இவ்விரண்டிடங்களே அப்பர் தேவாரத்துள் இவ்வன்பரே காட்டியிருக்கிறார். மேலும் காலபாசத் திருக்குறுந் தொகையில் தீபம், மலர்மாலை, தூபம், சாந்தம் ஆகியவற்றைச் சேர்த்தே சொல்வதையும் காண்கிறோம்.

வாம தேவன் வள நகர் வைகலும்
காம மொன்றில் ராய்க்கை விளக்கொடு
தாமம் தூபமும் தண் நறுஞ் சாந்தமும்
ஏம மும்புனை வாரெதிர் செல்லலே.

"பாவமேவும் உள்ளமொடு பத்தியின்றி நித்தலும்
ஏவமான செய்துசாவ தன்முனம்மி சைந்துநீர்
தீவம்மாலை தூபமும்செ றிந்தகைய ராகிநம்
தேவதேவன் மன்னுமூர்தி ருந்துகாழி சேர்மினே"

என்ற சம்பந்தர் தேவாரமும் நீர், தீபம், மாலை, தூபம் என நான்கும் நிரலாகக் கூறல் காண்க.

சுந்தரர் தேவாரத்தில் 'திருச்சுழியல் நிலந்தாங்கிய மலரால் கொழும்புகையால் நினைந்தேத்தும் தலம்'' என்று கூறுகிறார். எனவே, சலம், பூ, தூபம் என்பன முறையாக அமைந்தவை. இந்த மூன்றையும் அவர் கூறுகிறார்; நீராட்ட மறந்திலேன், மலர் இட மறந்திலேன், தூபம் காட்ட மறந்திலேன் என்று அப்பர் கூறுகிறார். இது முறையே ஆகும். இவற்றுள் முதல் இரண்டை மட்டும் கொண்டு மூன்றாவதாகிய தூபத்தை விலக்குவதால் என்ன பொருள் பொலிவு ஏற்படுகிறது என்பது விளங்கவில்லை.

எனவே, தூப என்ற சொல்லைத் தூவ என்று திருத்த ஆதாரமில்லை, நியாயமுமில்லை; அது முறையுமன்று, அதனால் பொருட் சிறப்பும் விளையவில்லை.

அடுத்து, அப்பர் தேவாரம் முதல் திருமுறை ஏழாம் பதிகம், கச்சியேகம்பம், மனத்துள் வைத்து திருப்பதிகம் மூன்றாம் பாடலில் 'அப்போது மலர்தூவி' என்பது, 'அப்போடு மலர்தூவி' என்று இருப்பது பொருந்தும் என்று

இவ்வன்பர் குறிப்பிட்டிருக்கிறார்; உண்மை. சைவ சித்தாந்த சமாஜத்தார் அப்பர் தேவாரம் மூன்றும் பதிப்பு அச்சிட்டகாலை (1941), பாலசுப்பிரமணிய முதலியார் விருப்பப்படி யாம் ஏடுகள் பார்த்துப் பரிசோதித்துக் கொடுக்க இந்த அடி அப்போடு மலர்தூவி என்றே அச்சிடப்பட்டுள்ளது. முன்னமே அச்சிட்டவர்கள் ராமசாமிப் பிள்ளை (1882), செந்தில்வேல் முதலியார் (1893) ஆகியோர் அப்போது என்று அச்சிட, சுவாமிநாத பண்டிதரும் அப்போது என்றே பாடங் கொண்டார். பின் வந்தோர் சுவாமிநாதப் பண்டிதர் பதிப்பையே தங்களுக்கு ஆதாரமாகக் கொண்டபடியால் அப்போது என்றே அச்சிட்டிருக்கிறார்கள். இவ்வன்பர் காட்டியபடி அப்போடு என்பதே திருத்தமான பாடம்.

பொதுவாக. பின் வருகின்ற பதிப்பாளர் நூலைச் செம்மைப் படுத்திப் பதிப்பிக்க எண்ணுவதே இல்லை. பிறர் அச்சிடுவதை அப்படியே இவர்கள அச்சிட்டுக் கொள்வதால், பாடத்திலுள்ள பிழையைப் பற்றிய நினைவே இவர்களுக்கு வருவதில்லை. மூல ஏட்டுக்கு மாறுபடாமல் நூல்களைச் செம்மைப் படுத்திப் பிழையற அச்சிடவேண்டும் என்ற கருத்துக் கொண்டவர்கள் டாக்டர். சாமிநாத ஐயர், அனவரத விநாயகம் பிள்ளை, வையாபுரிப் பிள்ளை ஆகியோர். வையாபுரிப் பிள்ளை அச்சிட்ட சங்க இலக்கியம், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகியவற்றை ஊன்றிப் பார்த்தால் இது நன்கு விளங்கும். சமீப காலத்தில் மர்ரே கம்பெனி ராஜம் மிகவும் திருத்தமாகப் பல நூல்களை அச்சிட்டிருக்கிறார்; எல்லாம் திருத்தமான பாடம் கொண்டவை.

தேவார அடங்கன் முறைக்கு இத்தகைய முயற்சி வேண்டும். கிடைக்கின்ற ஏடுகளை யெல்லாம் தொகுத்துத் திருத்தமான செம்மையான பாடத்தை எடுத்துத் தருகின்ற பதிப்பு வேண்டும். இத்துறையில் முயன்று திருமுறைகளை மேற்கூறிய ராஜம் செப்பம் செய்து வைத்திருக்கிறார். பலவகையான ஊக்கக் குறைவினால் அவர் வெளியிடவில்லை. சைவ மக்கள் அவருக்கு ஊக்கமளித்துத் திருமுறைகளை வெளியிடச் செய்வார்களாக.

பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார் மணிவிழா வாழ்த்து

(ச. நடேச முதலியார், தாம்பரம்)

மணிவிழா காணும் என் அரிய நண்பர், பேராசிரியர் திரு. பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார் M. A, அவர்கள் தந்தையாருக்கும் எனக்குமே நீண்ட தொடர்பு உண்டு. அவருடைய தந்தையார் திரு. பூ. வேலு செட்டியார் அவர்களுடைய நட்பு சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன் கிடைத்தது. திரு. வேலு செட்டியார் அவர்கள் சைவ சித்தாந்த சண்டமாருதம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர் அவர்கள், உயர்திரு. கா. ஆலாலசுந்தரம் பிள்ளையவர்கள், ஸ்ரீலஸ்ரீ. செந்தில்நாத ஐயர் அவர்கள், உயர்திரு. கயப்பாக்கம். சதாசிவ செட்டியார் அவர்கள், ஸ்ரீலஸ்ரீ ஞானியாரடிகள், யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதர், நா. கதிரைவேற் பிள்ளை அவர்கள் முதலானோர் சொற்பொழிவுகளில் பெரிதும் ஈடுபட்டு ஒழுக்க சீலராய் வாழ்ந்தவர். அவர்தம் இரண்டாம் திருமகனாராகிய திரு. ஆலால சுந்தரஞ் செட்டியார் அவர்களும் இளமை முதற்கொண்டே சமயப் பற்றுக்கும் நல்லொழுக்கத்திற்கும் உறைவிடமாய்த் திகழ்ந்தனர்.

பச்சையப்பன் கல்லூரியிலும், பின்னர் அண்ணமலைப் பல்கலைக் கழகத்திலும் பயின்று பட்டம் பெற்றவர். அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்ற காலத்தில் பேராசிரியர்களான. பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் அவர்கள், நாவலர். சோமசுந்தரபாரதியார் அவர்கள் சொல்லின் செல்வர். ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள், சுவாமி விபுலானந்தர் முதலியோருடைய அன்பிற்குரிய மாணவராய் விளங்கினர்.

திரு. செட்டியார் அவர்களுடைய இல்லறம் செவ்வி தில் அமைந்தது. அவர்களுடைய இல்லத்தில் நாள்தோறும் குடும்பக் கூட்டு வழிபாடு நடைபெறுவதைக் கண்டு நான் மகிழ்வேன். திரு. ஆலால சுந்தரஞ் செட்டியாரவர்கள் தில்லை நடராஜரையும் சிவகாமி அம்மையையும் ஆன்மார்த்தமாக வழிபடுபவர். ஆண்டு தோறும் ஆனித்திருமஞ்சனம், ஆருத்திரா ஆகிய விழாக்களுக்குத் தவறாமல் சிதம்பரம் சென்று தரிசனம் செய்துவரும் நியமம் கொண்டவர்.

திரு. செட்டியாரவர்கள் புகழ் கருதாது பொதுத் தொண்டாற்றி வருபவர். முத்தியாலுப்பேட்டை மல்லிகேஸ்வரர் ஆலயத்தில் தீப கைங்கரியத்தைத் தவறாமல் நடத்தி வருகின்றார். கிழக்குத் தாம்பரம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஸ்ரீ கந்தப்பெருமானார் ஆலயத்தின் மானேஜிங் டிரஸ்டியாகயிருந்து பல இடையூறுகளுக்கிடையே, திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடைபெறும்படி செய்தது போற்றற்குரிய தொண்டாகும். எந்தப் பொறுப்பை ஏற்றாலும் கண்ணுங்கருத்துமாக அதனை நேரிய வழியில் செம்மையாக நடத்தித்தரும் அவருடைய திறம் பாராட்டற்குரியது.

திரு. செட்டியாரவர்கள் சிறந்த பேச்சாளர். அவர் சில நூல்களும் எழுதியுள்ளார். அவை பல்கலைக் கழகங்களில் பாடப் புத்தகங்களாக வைக்கப்பட்டுள்ளன.

கூரிய அறிவும், சீரிய புலமையும், இனிய நற்பண்புகளும் உடைய திரு. செட்டியார் அவர்கள் இன்னும் பன்னெடுங்காலம் சைவத் தொண்டும், தமிழ்த்தொண்டும் ஆற்றிட, அவருக்கு வாழ்நாள் முதலிய நலங்கள் எல்லாவற்றையும் அருளிக் காக்கும்வண்ணம் அம்பலவாணன் அடிமலரிணைகளைப் பிரார்த்திக்கின்றேன்.

சமாஜத்தின் பங்கு யாது?

(சோதிகுமார் பி. ஏ.,)

மிகமிகத் தொன்மையானது சைவ சமயமென்பதை யாமறிவோம். அதைப்போன்றே உலகிலுள்ள ஏனைய தத்துவங்களிலும் தொன்மையும் சிறப்பும் பெற்றது நம் இந்தியத்தத்துவமென்பது தெரியக்கிடக்கிறது. அதிலும் நம் சைவ சித்தாந்தம் எல்லோராலும் போற்றற்குரியதாக மிகச் சிறந்து விளங்குகிறதென்பது வெள்ளிடைமலை.

தமிழர்களாகிய நமக்கு, குறிப்பாக சைவர்க்குக் கிடைத்தற்கரியதான பொக்கிஷம் போன்று சைவ சித்தாந்தம் இன்று விளங்குகிறது. நம் சைவ சித்தாந்த மகா சமாஜம் ஒன்றுதான் 62 ஆண்டுகளுக்கு முன்னரே சைவப் பெரியார்கள் சிலரால் தோற்றுவிக்கப்பட்டு மிகச் சிறந்த பணி இத்தனை ஆண்டுகளாகச்சீரிய முறையில் ஆற்றி வருகிறது. ஒவ்வோராண்டும் சைவ மகாநாடுகளை ஒவ்வோர் இடத்தில் மூன்று நாட்களுக்கு நடாத்தி சைவப் பெரியார்களைக் கொண்டு அருமையான சொற்பொழிவுகளையாற்றுவித்து வருவதுடன், 'சித்தாந்தம்' என்னும் மாதத் தமிழ் இதழ் ஒன்றைக் கடந்த 40 ஆண்டுகளாக நடாத்தி வருவதுடன், இரண்டாண்டுகளாக ஆங்கிலத்திலும் சைவ சித்தாந்தம் என்னும் முத்திங்கள் இதழொன்றினைச் சிறந்த முறையில் நடாத்தி வருவதை நாமறிவோம்.

சைவ சித்தாந்த மகா சமாஜம் எத்தனையோ இடர்களையும், இன்னல்களையும் படிப்படியாகக் கடந்து சைவ உலகத்திற்கே ஒரு வழிகாட்டியாக இருந்து வந்திருக்கிறது. ஒவ்வோராண்டும் சமாஜத்தின் குறிக்கோள்படி ஒவ்வோர நன்னாளிலும் வரும் நாயன்மார்கள், மற்றும் பல ஞானாசிரியர்கள், குருபூசைகளையும், திருநட்சத்திர விழாவையும் விடாது நடாத்தி வருவதுடன், ஆண்டு விழாக்களையும் பல சைவ அறிஞர்களைக்கொண்டு இனிது நடாத்தி வருவது மிகச் சிரமமானதென்பதை உடனிருந்து

பார்ப்பவர்கள் எளிதில் அறிவர். இதற்கே செயலாளர், தலைவர் போன்றோர் அரும்பாடுபடவேண்டியிருக்கிறது. ஆயினும் இத்துடன் சைவ உலகம் திருப்திப்பட்டுக் கொண்டு வாளாவிருக்கவேண்டியதுதானா?

அண்மையில் அமெரிக்க நாட்டில் ஒரு பெரிய விழிப் புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இந்து சமயத்தைப்பற்றி யும் யோகத்தைப்பற்றியும் அங்குள்ள மக்கள்—குறிப் பாகச் செல்வந்தர்கள்—நம் இந்தியத் தூதராலயத்திற்குத் தொலைபேசி மூலம் நாள் தோறும் இடைவிடாதுபேசி, தங்கட்கு இந்து சமயத்தைப் பற்றியும், குறிப்பாக யோகத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ள விரும்புகிறார் கள். இந்தியாவில் எங்கெந்த இடங்கள் நிலையங்கள், சிறந்தவை, ஆதாரமான நூல்கள், தக்க ஆசிரியர்கள் ஆகிய இவைபற்றிக் கேட்டபடி உள்ளனர். குறிப்பாக நியூயார்க் நகரத்தில் இந்திய மறுமலர்ச்சி சிறந்து ஓங்கி யுள்ளதென்றும் ஏன் இந்து சமயமே அங்கு வந்துவிட் டாற்போன்றுள்ளதென்றும் நாளிதழ்களில் செய்திகளைக் காண ஒவ்வொரு இந்தியனும் பெருமிதமடைவானென்பது திண்ணம். மற்றும் அவர்களில் பலர் இந்துவாகவே ஆகி யுள்ளனரென்றும், ஏனையோரும் அப்படி இந்துக்களாக இருக்கின்றனரென்றும் தெரிகிறது.

இங்கிலையில் நம் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் பங்கு யாது? இன்றைய அறைகூவலுக்கு சமாஜம் விழித் தெழவேண்டாமா? வெளிநாட்டவர், அமெரிக்க நாட்ட வர்போல மற்ற நாட்டவர்களும் பல உண்மையான தத்து வங்களை யறிந்து சைவர்களாக ஆவார்கள். அவ்வாறு ஆக நாம் என்ன வசதி செய்யப்போகிறோம். இன்று பல பல் கலைக் கழகங்களிலும் தத்துவப் பேராசிரியர்கள் வேதாந் தத்தைப் பற்றி அறிவரேயன்றி பன்னெடுங்காலமாகத் தமிழகத்தில் போற்றிப் பாதுகாத்து வரும் சைவ சித்தாந் தத்தைப் பற்றி அறியார். அங்கு தக்க இடமில்லாமல் இருக்கும்போது, சமாஜம் அதற்குரிய செயல் ஒன்றும் செய்யவேண்டாமா?

இன்று கூர்ந்து நோக்கின் சைவ சித்தாந்த வல்லுனர்கள் எத்தனைபேர் உள்ளனர்? விரல்விட்டு எண்ணவேண்டிய நிலையிலல்லவா அவர்கள் உள்ளனர். அவர்கள் தலைமுறைக்குப்பின் நிலை என்ன?—அவர்களுடன் அனைத்தும் கருகிப்போகவேண்டியதுதானா? சைவ சித்தாந்தத்தை நன்கு ஓதியுணர்ந்து அருளறிவு பெற்றவர்கள் தமிழில் மட்டும் இருந்தால் போதுமா? பிறநாட்டு நல்லறிஞர்கள் போற்றும் வண்ணம் நமதருளாசிரியர்கள் சித்தாந்த சாத்திரங்களைப் பிறமொழிகளிலும் குறிப்பாக ஆங்கிலத்திலும், ஜெர்மன், பிரெஞ்சு, ருசிய மொழிகளிலும் அந்நாட்டவர்க்கு எடுத்துரைக்க ஆற்றல்பெற்ற பல பெரியார்கள் வேண்டுமல்லவா? அவர்கள் அந்தந்த நாட்டிற்குச் சென்று நம் சாத்திரங்களைப் போதிக்கத் தயாராயிருப்பது அவசியமல்லவா? இதற்கெல்லாம் சிலரைத் தவிர பெருவாரியாக நம்மவரில் இலர் என்பது தெரியாததொன்றல்லவே?

சமாஜம் இனியும் கடந்த இத்தனை ஆண்டுகளைப்போவிராமல், நம் இளைஞர் சமுதாயத்தை இதற்கெனத் தயார் செய்யவேண்டுமென்பதை யாவரும் ஒப்புக்கொள்வரென்பது திண்ணம். அப்படியாயின் ஒரு நீண்டகாலத் திட்டமிட்டு அதற்கெனப் பல அறிஞர்களைக் கொண்டு, வேண்டுமாயின் பல மடாதிபதிகளைத் துணைக்கொண்டு இதற்கென அரசாங்கத்தின் ஆதரவையும் பெற்று கிறீத்தவமார்கள் சமயப் பயிற்சிக் கல்லூரிபோன்று ஒன்று விரைவில் தொடக்கி, நம்மிளைஞர்களைத் தேர்ந்தெடுத்து தமிழிலும், பிறமொழிகளிலும் தேர்ச்சிபெறச் செய்யவேண்டுவது இன்றியமையாததாகும். அண்மையில் பேரூர் மாநாட்டில் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் பெருமுயற்சியால் கருத்தரங்கு நடைபெற்றபோது இளைஞர் சமுதாய எழுச்சியைக் கண்டோம். ஆனால் அதற்குத் தக்கபடி சமாஜம் ஆதரவு தராததுடன் வழிகாட்டத் தவறிவிட்டதென்பது அவர்களது குறை.

இதற்கெல்லாம் தஞ்சை திருவெண்காட்டு ஆண்டு விழா வழிகாட்டுமாக.

திருக்குறள் போதுமா?

(கொ. நீ. சிங்காரவேலு)

(திரு. சி. இராஜகோபாலாச்சாரியர், 1967, அக்டோபர், 21-ஆம் தேதி வெளிவந்த 'சுயராஜ்யா' வார இதழில் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.)

'மெத்யூ ஆர்னால்ட் என்பவர் உண்மையான சமயம் வெறும் ஒழுக்கம் மாத்திரம் அன்று; அது உணர்ச்சியோடு கூடிய ஒழுக்கம் என்று எழுதியுள்ளார்.' பள்ளிகளில் நீதியைக் கற்பிக்கும் வகுப்பு இருக்க வேண்டுமென்று யாவரும் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் மெத்யூ ஆர்னால்ட் கூறிய வேறுபாட்டை மறந்து விடுகிறார்கள். சமயத்தில் நீதி அடங்கியுள்ளது. சமயத்தின் மூலம் நீதியை மிகவும் திறமையாகக் கற்பிக்க முடியும்; ஏனென்றால் நீதி கடவுளுணர்ச்சியால் உயிர்ப்பிக்கப்படுகிறது. கடவுளுணர்ச்சி யில்லாத் நீதி பயனளிக்காது. அது, கணக்கு அல்லது விஞ்ஞானம் கற்பிப்பது போலாகும். சில தலைவர்கள் புத்த மதத்தைத்தான் போற்றுகிறார்கள். அம் மதத்தில் நல்ல நீதிகள் இருக்கின்றன. ஆனால் கடவுள் இல்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள். அப்படியிருந்தால் அச்சமயம் இந்தியாவிற்கும், ஆசியாவிற்கும் பயனளித்திருக்காது. புத்தரைப் பற்றிய உணர்ச்சி பௌத்தத்தை உண்மைச் சமயமாக்குகிறது. சமயச் சார்பற்ற பல்கலைக் கழகத்திற்கென்றே இயற்றப்பட்ட நீதி நூலில் அது எவ்வளவு முயன்று அறிவில் சிறந்த பேராசிரியரால் இயற்றப்பட்டிருந்தாலும்–மேற்கூறிய உணர்ச்சியின் கூறு இருக்காது. சமய போதனை மக்களை நன் மக்களாக்கும். சமயச் சார்பற்ற நீதி நூலைப் பிள்ளைகளுக்குக் கற்பித்து அவர்களை அதில் டி-பிளஸ் மார்க் வாங்கச் செய்தாலும் அதனால் அவர்கள் நடத்தையில் மாறுதல் இருக்காது.

மேற்கூறிய கருத்துக்கள் சிந்திக்கற்பாலன. இவை மேலும் சில சிந்தனைகளைத் தூண்டி விடுகின்றன. திருக்குறள் வெறும் நீதி நூலா? அது சமயம் கலந்த நீதி நூல் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. கடவுள் வாழ்த்து. நீத்தார் பெருமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்

தல் முதலிய அதிகாரங்களில் சமயம் விரித்துரைக்கப்படுகிறது. தொன்றுதொட்டு திருக்குறள் சைவ சமய நூலாகவே கருதப்பட்டு வந்தது. பின்வரும் ஔவை மூதாட்டியார் வாக்கு இதை உறுதிப்படுத்துகிறது.

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என் றுணர்"

இருப்பினும், திருக்குறளை முழுமையாக நோக்குமிடத்து, சமய உணர்ச்சியுள்ள அதிகாரங்கள் மிகச் சிலவே. அறத்துப்பாலின் உயிர்நாடி அறம். பொருட்பாலின் உயிர் நாடி பொருள். காமத்துப்பாலின் உயிர்நாடி காதல் அல்லது அன்பு. சமயத்தைப் பற்றிக் கூறுமிடத்தும் அறிவு தூண்டப்படுகிறதேயன்றி, உணர்ச்சி ஊட்டப்படுவதில்லை. திருக்குறளில் உணர்ச்சியுள்ள பாகம் பெரும்பாலும் காமத்துப்பாலே. அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள்கள் நான்கினும் வள்ளுவர் வீட்டைப் பற்றித் தனியாக எடுத்துக் கூருததற்குப் பரிமேலழகர் கூறும் காரணம் பின் வருமாறு:—

"வீடென்பது சிந்தையு மொழியும் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்". இச் சமாதானம் மன நிறைவு அளிப்பதாகயில்லை. வீட்டிற்குத் தொடர்பானவைகளைச் சாத்திரங்கள் இலக்கண வகையாற் கூறுகின்றன. வீட்டு அனுபவத்தைத் தோத்திரங்கள் ஒருவாறு சுட்டிக் காட்டுகின்றன. 'தந்தது உன் தன்னை கொண்டது என் தன்னை' முதலான திருவாசகப் பாடல்களை ஓர்க. எவ்வாருயினும், மனிதன் முழுமையடைவதற்குத் திருக்குறள் போதாது. நம் உள்ளங்களில் திருக்குறளாகிய அடித்தளத்தின் மீது திருமுறைகளாகிய கோபுரத்தை எழுப்பவேண்டும்.

டாக்டர் அ. சி செட்டியார் மறைவு

(துணையாசிரியர்)

டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியாரவர்கள் மறைவு கேட்டு சமாஜம் தன் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது. திரு. செட்டியாரவர்கள் நம் சமாஜ மேம்பாடு குறித்து அடிக்கடி உசாவுவார்கள். 1937 ஆம் ஆண்டு நம் சமாஜச் சார்பில் வேலூரில் நிகழ்ந்த முப்பத்திரண்டாம் ஆண்டு விழாவில் சைவ இளைஞர் மாநாட்டுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். நாம் விரும்பும்போதெல்லாம் கட்டுரையுதவியும் சொற்பணி புரிந்தும் வந்த உத்தமராவர்.

அவர்கள் குடந்தையில் சிறந்த சைவச் செட்டியார் குடும்பத்தில் தோன்றினார்கள். குடிப்பெருமைக்கேற்ப சிறந்த பண்பாடு அமையப்பெற்றிலங்கினார்கள், எழுத்தர் அலுவலிலிருந்து பல்கலைக் கழகத் துணைவேந்தர் அலுவல் முடிய எல்லா நிலைப்பதவிகளையும் யாவரும் போற்றும் வண்ணம் ஏற்று நடத்திய பேராற்றல் மிக்கவர். தமிழ், தமிழாசிரியர், தமிழ்நாடு தான் அவர்களுக்கு உயிர் எனக் கருதினார்கள். சைவம் பெருக்கும் சிலராயமைந்து விளங்கினதோடு அம்பலவாணப் பெருமானைத் தம் வழிபடு தெய்வமாகப் போற்றி வழிபட்டார்கள். அகத்தூய்மையும் புறத்தூய்மையும் ஒருங்கே வாய்ந்த பேரறிஞர். குறள் வழி தம் வாழ்க்கையை யமைத்து ஒழுகியவர். தமிழ் மேம்பாட்டை உலகமெலாம் பரவும்வகை செய்ய பாரதியார் கண்ட கனவை நனவாக்குவான்வேண்டி இரஷியா, இங்கிலாந்து, முதலிய மேனாடுகளுக்கும் சென்று தமிழ் பரப்பிய பெருந்தகையாராவர். அவரால் இன்னும் எதிர்காலத்தில் பல ஆக்க நிலைகள் தமிழ்த்தாய்க்கும் சைவ வுலகுக்கும் கிடைக்கும் என எதிர்நோக்கியிருந்தோம். ஆனால் அவ்வெண்ணம் சிதறுண்டுபோயிற்று. அண்மையில் தான் மதுரையம்பதியில் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா அவர்களுக்குக் கொண்டாடப்பெற்றது.

இன்னும் பல விழாக்கள் நடத்த எண்ணியிருந்தோம். அவர்கள் தொண்டு கலவாத நற்சபைகள் தமிழ் நாட்டில் இல்லையென்றே கூறலாம். தொண்டோடு பணவுதவியும் புரியும் வள்ளன்மைப் பண்பும் மிக்கவர் என்பதை நன்கு அறிவோம்.

அத்தகைய பெருந்தகை 20—11—67 திங்களன்று காணமற்போய்ப் பின்னர் அகால மரணமெய்தினரென்ற செய்தி மிகவும் பேரதிர்ச்சிதரத்தக்கதாயுள்ளது. அவர்கள் இறப்புப்பற்றிப் பல்வேறுபட்ட செய்திகள் உலவுகின்றன. எப்படியோ விதி சதிசெய்தது. கூற்றுவன் ஆட்கொண்டுள்ளான். நம்மிடமிருந்து பெரும்பிரிவெய்தி விட்டார்.

பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவும்
கல்லாதார் வாழ்வது அறிதிரேல் கல்லாதார்
சேதனம் என்னுமச் சேறகத் தின்மையால்
கோதென்று கொள்ளாதாம் கூற்று

என்ற நாலடியார்ச் செய்யுளுக்கேற்ப நிறைந்த சேதனப் பொருளுண்மையால் இயல்பாகவே தன்னிடம் வருவதற்கு முன்னர் நம் செட்டியாரவர்களைக் கூற்றுவன் அவாவினன்போலும். அவர் பிரிவு ஈடு செய்ய முடியாததொன்று. என்செய்வது?

சிற்றறிவினமாகிய நாம் பேரறிவினனாகிய அவனை நினைத்து இனியாவது அவருடைய ஆன்மா நன்னிலையுற அருள்பாலிக்க வேண்டி வழிபடுவதல்லால் வேறு செய்யத்தக்கது யாது என அறிகிலேம். அற்றவர்க்கருளும் அருநிதியே! மாநிலத் தமிழாசிரியர் கழகத் தலைவரை, சைவப் பேரன்பரை இன்சொல்லாதிய எல்லா நற்குணங்களும் பொருந்திய ஏந்தலை இம்மையில் அகால மரணத்திற்குட் படுத்தினும் அம்மையிலாவது அவர் ஆன்மா நன்னிலையுற்றிலங்க அருள்பாலிக்குமாறு வேண்டித் துதிக்கின்றோம். அவர் ஆன்மா இறைவன் இன்னருளில் கலந்து இன்பந்துய்த்து ஏமம் அடைவதாகுக.

மதிப்புரை

"சிவஞான சித்தியார் சுபக்கச் சுருக்க வினு விடை" என்னும் நூல் ஒன்று வரப்பெற்ருேம். இதனை எழுதியவர் சுத்தாத்துவித சைவ சித்தாந்தப் பேராசிரியர் சபா. சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள் ஆவர். இந்நூலில் சிவஞான சித்தியார் சுபக்கத்தை வினுவிடை முகத்தான் படிப்படியாக விளக்கிச் செல்லுந்திறம் போற்றத்தக்கதாயுள்ளது. சாத்திர நூற்கருத்துக்களை மக்களுக்குப் பல்லாற்ருனும் விளங்கவைத்து அவர்களைச் சிறப்புற்ருேங்கச் செய்வது அறிஞர்கள் கடனுகும். அந்நிலையை மனத்துட்கொண்டு ஆசிரியர் மிகவும் தெளிவாகச் சித்தியார் சுபக்கத்தை விளக்கிக் கூறியுள்ளார். சுபக்கத்தைத் தெளிவாகப் படித்தறிய விரும்புவோர் இதனையும் துணையாக வைத்துக் கொண்டு படிக்கின் ஐயம் தெளிந்து மேன்மையுறுவது ஒருதலை. நூல் வேண்டுவோர் சித்தாந்த சிகாமணி ஆதி. தியாக தண்டபாணி செட்டியார், பரங்கிப்பேட்டை, தென்னுர்க்காடு மாவட்டம் என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். அண்மையில் திருவெண்காட்டில் நிகழவிருக்கும் சைவ சித்தாந்த மகா சமாஜ மாநாட்டிலும் நூற்பிரதிகள் விலைக்குக் கிடைக்கும். விலை ரூ. 2-50

(அம்பை)

"சிவபூசைத் திரட்டு" என்னும் நூல் ஒன்று வரப்பெற்ருேம். இது சிவபூசை செய்கிறவர்களுடைய உபயோகத்திற்காகப் பன்னிரு திருமுறைகளிலிருந்தும் தொகுக்கப்பெற்ற 111 பாடல்களடங்கிய திரட்டு நூல். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் வைத்திருந்த ஏட்டில் கண்டபடி பருத்தித் துறையைச் சேர்ந்த தும்பளை சைவப் புலவர் வ. சுப்பிரமணியம் அவர்களால் இது வெளியிடப் பெற்றது. இந்நூல் விற்பனையால் வரும் பணம் புலோலி பசுபதீஸ்வரர் ஆலயக் கோபுரத் திருப்பணி நிதியுடன் சேர்க்கப்பெறும். அருமையான பாக்களைத் திரட்டிச் சேர்த்திருப்பது போற்றத்தக்கது. தாய்மொழிவழி வழி

பாடாற்ற நினைப்பார்க்கு இது மிகவும் தகுதி வாய்ந்த நூலாகும். வேண்டுவோர் சைவப்புலவர் வ. சுப்பிரமணியம், தும்பளை, பருத்தித்துறை, சிலோன் என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். விலை சதம் 50.

(அம்பை)

"சிவஞானபோதம்—உரை" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இதன் ஆசிரியர் திரு. G. வரதராசப் பிள்ளை அவர்கள் ஆவர்.

சிவஞான போதச் சூத்திரங்களுக்கு முடிபு, பதப்பொருள், விளக்கம், கருத்து என்று நான்கு முறைகளில் உரையினை உரையாசிரியர் எழுதிச் செல்கின்றார். சிவஞான போதத்தைப்பற்றி அறிய விரும்பும் சாதாரண மக்களும் இந்நூலைப் படித்தறிந்து அதன் பொருளைத் துய்த்து இன்புற வாய்ப்பை ஆசிரியர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். அதற்குச் சைவவுலகம் அவர்களுக்கு மிகவும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையது. மேலும் இதில் மெய்கண்டார் வரலாறும் உள்ளது. 66 பக்கங்கள் கொண்டு நன்முறையில் அச்சிடப்பெற்ற இந்நூலை யாவரும் வாங்கிப் படித்துச் சமய விளக்கம்பெறுவார்களாக. நூல் வேண்டுவோர் "செயலாளர், திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம், மேலரண்சாலை, திருச்சி 2" என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். விலை ரூ. 0–50

(அம்பை)

"உண்மை விளக்கம்—உரை" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம் இந்நூலின் உரையாசிரியர் காஞ்சிபுரம் தொண்டைமண்டலாதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள். இதற்குமுன் யான் கண்ட பல உரைகளிலும் விளக்கந் தரும் நிலையில் இது தலையிடத்தைப் பெற்று மிளிர்கின்றது எனக் கூறலாம். எங்கு ஐயம் நிகழ்கிறதோ அங்கு நன்முறையில் சுவாமிகள் விளக்கம் காட்டியருளியிருக்கிறார்கள். பல மேற்கோள்களுடன்

பண்டைச்சான்ருேர் உரையை ஒத்து இவ்வுரை நூலும் உள்ளது. இக்காலத்து இவ்வாறு உரை எழுதுவோர் மிக அரியர். இவர்களைப் பயன்படுத்தி ஆசியை முழுவதும் பெற்று இந்நூலை வெளியிட்ட புரசை மாணிக்கம் பதிப்பகத்தாரை எவ்வளவு பாராட்டினலும் தகும். இதனைப் போன்றே சுவாமிகள் மூலம் நம் சாத்திர நூல்கள் பலவற்றிற்கும் நல்லுரைகளை இப்பதிப்பகத்தார் வெளியிடவேண்டுகின்ருேம். தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் சார்பும் இவ்வெளியீட்டுக்குண்டு எனவும் தெரிகிறது. அன்பர்கள் எல்லோரும் அவசியம் படிக்கத்தக்க மிகச் சிறந்த உரை நூல் இது என்பதில் ஐயமில்லை. யாவரும் வாங்கிப் படித்துச் சமய அறிவு மேம்பட்டிலங்குவார்களாக. இந்நூல் கிடைக்குமிடம்:—மாணிக்கம் பதிப்பகம், 43, முருகப்ப முதலி தெரு, புரசை, சென்னை–7. விலை ரூ 2–75

(அம்பை)

வரப்பெற்ருேம்.

வித்துவான் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர், (எழுமாத்தூர் வேலம்பாளையம் (அஞ்சல்) எழுமாத்தூர் வழி, ஈரோடு) அவர்கள் எழுதிய ''திருச்செங்கோடு திருவேரகம்'' என்னும் ஆராய்ச்சிக் கட்டுரை நூலும் ''கடவுள் வாழ்த்து'' என்னும் கட்டுரை நூலும் வரப்பெற்ருேம். திருவேரகம் திருச்செங்கோடு என்பதற்கு மேற்கோள் காட்டிய நூல்கள் யாவும் திருச்செங்கோட்டுச் சிறப்பைப் புகழும் நூல்களாகவே உள்ளன. பிற நூல்களிலிருந்தும் சான்றுகளிருக்குமேல் வெளியிடின் நன்ருயிருக்கும். அவ்வாறு பிறநூல் மேற்கோள் ஒன்றுமில்லா திருத்தல்பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை என்ற அளவில் அமைதி கொள்ளலாமேயன்றி இதுவே முடிவாதற்குரிய வாய்ப்பில்லை, அறிஞர்கள் சிந்தனையை இவ்வாராய்ச்சி தூண்ட வாய்ப்பாயிருக்கும்.

(அம்பை)

வாழ்த்துகிறோம்

திரு. இரத்தினசாமிச் செட்டியார் அவர்கள் 60-ஆம் ஆண்டு நிறைவு விழா 5-12-67 செவ்வாய்க் கிழமையன்று சிதம்பரத்தில் சிறப்புற நிகழ்ந்தது.

திரு. செட்டியார் அவர்கள் நம் சமாஜப் பொன் விழாவினையும், வயிர விழாவினையும் தில்லையில் நடத்தி வைக்க அடிப்படைக் காரணமாயிருந்தவர்கள். நடராஜப் பெருமானையே வழிபடு கடவுளாகக் கொண்டு ஒழுகும் சிறந்த சைவ சீலராவர். குறைவாகக் கொடுக்காமலும் நிறைவாக எடுக்காமலும் செந்நாப் போதார் அருளிய நெறிப்படி வாணிகம் செய்து வாழ்வாங்கு வாழ்கிற உத்தமராவர். அடக்கம், இன்சொல், ஆரவாரமற்ற தன்மை முதலிய அரும் பண்புகளையே அணியாகக் கொண்டு ஒழுகிய இவ்வுத்தமரைப் பல சபையினரும் போற்றுவதில் வியப்பொன்றுமில்லை.

இவர்கள் மணிவிழா அன்று நம் சமாஜச் சார்பில் நம் சமாஜத் தலைவர் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் நேரே சென்று மணிவிழாத் தலைவரை வாழ்த்தியருளினார்கள். அத்துடன் நம் சமாஜச் சார்பில் வாழ்த்துப்பா ஒன்றும் வாசித்துக் கொடுக்கப் பெற்றது.

மணிவிழா கொண்ட பெரியார் திரு. செட்டியார் அவர்கள் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு எல்லா நலங்களும் பெற்று இன்புற்றுத் தழைத்து வாழ அம்பலவாணப் பெருமான் அருள்சுரக்க அவனடியிணைகளையே வாழ்த்தி வணங்குகின்றோம்.

மதிப்புரை

'திருவருட் செல்வம்' என்னும் தலைப்புடைய நூல் ஒன்று வரப் பெற்றோம். இதன்கண் விநாயகர், முருகர், சிவபிரான், உமையம்மை ஆகிய கடவுளருக்கு நேர் முகமாக விடுக்கும் வேண்டுகோள் போல அமைந்த செய்யுட்களை இவ்வாசிரியர் தொகுத்துச் சேர்த்து வெளியிட்டுள்ளார். இப்பாடல்களை அவ்வம் மூர்த்திகளின சந்நிதியில் பாடும் போது இயற்கையாகவே மனம் நெகிழ்ச்சி ஏற்படுதல் ஒருதலை. இதன் தொகுப்பாசிரியர் சு. அ. இராமசாமிப் புலவர்

ஆவார். மக்கள் இறைவனிடத்து வேண்டுகோள் விடுத்து அவனருளால் தான் உய்திபெற முடியும் என்ற நிலையில் இந்நூலை வெளியிட்டுள்ளார். யாவரும் வாங்கிப் படித்து இறைவனருளைப் பெற்றுய்தி பெறுவார்களாக. நூல் கிடைக்குமிடம் :– சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பிராட்வே, சென்னை. என்பதாகும். விலை ரூ 0–50.

"இளம்பூரணர் எழுத்துரை" என்னும் நூல் ஒன்று வரப் பெற்றோம். இது மயிலம் ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரித் தலைவர் வித்துவான் ஆ. சிவலிங்கனாரால் எழுதப் பெற்றது. ஏறக்குறைய இருபதாண்டுகளுக்கு மேல் வித்துவான் மாணவர்களுக்குக் கற்பிக்கும் வாய்ப்புற்ற இவ்வாசிரியர் இளம்பூரணருரையில் எங்கெங்கு எவ்வெவ்விடர்கள் காணப்படுகின்றன என்பவற்றை நுனித்தறிந்து அவற்றினை இவ்வுரை மூலம் களைந்தது மிக மகிழ்ச்சிக்குரியதாம். இளம் பூரணர் வரலாறு காணப்படுவதில் ஆசிரியர் சமயம் பற்றிய ஆராய்ச்சி அவ்வளவு பொருத்தமானதாகவில்லை. 'சமயம் அறியப்படாச் சான்றோர்' என்று இளம் பூரணரைக் குறிப்பிடுவது சிறந்த ஆராய்ச்சியன்று. மற்று இவ்வாசிரியர் கூறிச் செல்லும் நுண் குறிப்புக்கள் யாவும் போற்றத்தக்கன. யாவரும் வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களாக. வெளியிட்டோர் மாணிக்கம் பதிப்பகம், 43, முருகப்ப முதலி தெரு, புரசைப்பாக்கம், சென்னை–7. 164 பக்கங்கள் கொண்ட சிறந்த பதிப்பு. விலை ரூ 3–00.

வரப்பெற்றோம்

புதுப்பாளையம் பழந்தமிழ்ப் புலவர் ப. மாசிலாமணி முதலியார் வரலாற்று நினைவு மலர் வரப் பெற்றோம். இதில் தி. முதலியார் அவர்களின் வாழ்க்கை வரலாறும் அவர்களைப் பற்றிப் பல பெருமக்கள் எழுதியனுப்பிய பாராட்டுரைகளும் அடங்கியுள்ளன. இம்மலரிலிருந்து இப்பெரியார் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுலகம் எய்திய அண்ணல் ஆவார் எனத் தெரிகிறது. 34 பக்கங்கள் கொண்ட இம் மலரை வெளியிட்டவர் பு. மா. ஜயசெந்தில் நாதன், தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்லைப் பள்ளி, காஞ்சிபுரம் ஆவார். விலை குறிக்கப் பெறவில்லை.

ஆந்திர அறிஞரும் ★
★ சைவ சித்தாந்தமும்

ஆந்திரம் தந்த பேரறிஞர்களுள் ஒருவரான திரு. சி. இராமலிங்கா ரெட்டி (சி. ஆர். ரெட்டி) ஆங்கிலத்தில் அரும் புலமை பெற்றிருந்தவர்; தம் தாய்மொழியிடமும் தனியன்பு வைத்திருந்தார்; இலக்கியப் புலமையோடு அரசியல் தெளிவும் படைத்திருந்தார்; அவர் தம் காலத்தில் தலை சிறந்த நாவலராகவும் திகழ்ந்தார். நல்லோர் எல்லோரும் போற்ற வாழ்ந்த அவர் ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராயும் விளங்கினர். அவர்தம் பொன்மொழி வருமாறு .

"பிரிட்டிஷார் ஏற்படுத்திய புது நெறியில் வாழ்கிறோம். அந்நெறி பல பெரு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. ஆயினும் அது பழங்கால அறம்போல நாட்டின் உயிர் வாழ்வாகவும் சூழ்நிலையாகவும் மாறவில்லை."

"தமிழர் தங்கள் போக்கில் தனி வளர்ச்சி எய்தியுள்ளார்கள். என் கருத்தில் சில வகைகளிலேனும் அவர்கள் திராவிட மேதையின் மென்மலராய் மலர்ச்சியாய் விளங்குகிறார்கள். சான்றாகச் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் காணப்படும் கருத்துகளின் பெருமையையும் உணர்வுகளின் உயர்வையும் எட்டிப்பிடிக்கவும் தெலுங்கில் எதுவுமில்லை. பல்வண்ண ஒளிமயமாய் விளங்கும் இந்தப் பண்பாட்டிற்குத் தமிழ் மக்களுடைய தனிச் சிறப்பு வாய்ந்த நன்கொடை சைவ சித்தாந்தம் ஆகும்."

(செங்கோல் = 15—10—67)

மார்கழி மாத விசேட தினங்கள்

9 (24—12—67) இயற்பகை நாயனுர் விழா
11 (26—12—67) மானக் கஞ்சாற நாயனுர் விழா
16 (31—12—67) சாக்கிய நாயனுர் விழா
23 (7—1—68) வாயிலார் நாயனுர் விழா
30 (14—1—68) சடைய நாயனுர் விழா
Do திருவாதிரை விழா

சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

சமாஜ உறுப்பினர் தங்கள் சந்தாத் தொகை ரூபாய் ஐந்தினையும் 31—12—67 க்குள் அனுப்பிவைக்க வேண்டுகின்றோம். வி.பி.பி யில் ஜனவரி மாத இதழை அனுப்புவதாயின் 75 காசுகள் வீணுக அதிகம் செலுத்தவேண்டியிருக்கும். மணியார்டர் மூலம் சந்தா அனுப்புவோர் 1. தங்கள் முழுப்பெயர், 2. சந்தா எண், 3. தெளிவான முகவரி, 4. மாவட்டம் ஆகியவற்றைக் குறித்தனுப்புதல் வேண்டும்.

ஈழநாட்டில் உள்ள அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை அரசியலார் இசைவு பெற்றுத் தவருது அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்கின்றோம்.

மலேசிய நாட்டில் உள்ள சமாஜ அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை திரு. வீ. சுந்தரம், செயலாளர், மலேசியா அருள்நெறித் திருக்கூட்டம், 163, ஜலன்பந்தர், குலாலம்பூர்'' என்ற முகவரிக்குச் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி:—

செயலாளர்,

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கீழமாட வீதி,
சென்னை-4.

உ

சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை

சைவத் தேர்வு வினாக்கள் - 1967

++++++++++++++++++++

சைவப் புலவர் தேர்வு

இலக்கணம்

காலம் : 3 மணி] [மதிப்பெண் 100

குறிப்பு:— கீழ்க்காணும் உட்பிரிவுகளில் வகைக்கொவ்வொன்றாக 4 உட்பிரிவுகளைவிட்டுவிடுக. மதிப்பெண் சமம்.

I க. "எகர ஒகரத் தியற்கையும் அற்றே"
இதன் பொருளை விளக்கி வரைக.

உ. ஓரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொருமொழி, இரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி எனப் பிரித்தற்குரிய காரணமென்னை?

ங. "ஈரெழுத்து மொழியும்...........
வேற்றுமையாயின் ஒற்றிடை இனமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி"
இதை விளக்கி வரைக.

ச. தொள்ளாயிரம், நூற்றிருபஃது என்பவை எவ்வாறு புணரும்? விளக்குக.

ரு. எழுத்ததிகாரத்துக் காணப்பெறும் இயல் பிரிவுச் சிறப்பினை விளக்கி வரைக.

II க. "காலம் உலகம் உயிரே உடம்பே" இப்பகுதியில் "உலகம்" என்பதற்குச் சேனவரையர் கூறும் தடை விடையை எழுதுக.

உ. "பெயரினுகிய தொகையும்" இத்தொடரிலிருந்து பெறப்படும் செய்திகள் யாவை?

ங. ஆறு தொகைகளும் பொருள்கொள்ளும் வகையான் எத்தனை வகைப்படும்? அவை யாவை? ஏதாவது ஒன்றிற்குச் சான்று தந்து விளக்குக.

ச. சொல்லெச்சம் பற்றிச் சேனவரையர் கருத்தை விளக்கி வரைக.

ரு. முன்னத்தினுணருங்கிளவி ஒன்று கூறி அஃது எவ்வாற்ருன் அத்தன்மைத்தாயிற்று என விளக்குக.

III க. கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருவன யாவை? அவைபற்றி விளக்குக.

உ. களவு வெளிப்படு நிலையை விளக்குக.

ங. தலைவிக்குரிய மாண்புகள் யாவை?

ச. தோழிக்குரிய சிறப்பியல்புகளை விளக்கி வரைக.

ரு. ஒப்பு எனக் கூறப்பெறும் தன்மைகளை விளக்கி வரைக.

IV க. சங்கை பற்றி அறிந்ததனை விளக்கி வரைக.

உ. பக்கங்கள் எத்தனை வகைப்படும்? அவைகளை ஒல்லுமாற்ருன் விளக்குக.

ங. வாக்கியப் பொருளுணர்விற்குக் காரணங்கள் யாவை? எவ்வாறு என விளக்கிக் காட்டுக.

௬. அபாவம் எத்தனை வகைய? ஏதாவது ஒன்றினை விவரி?

௭. வீடுபேறடைதற்குத் தருக்க ஞானம் எவ்வாற்றான் பயன்படுகிறது?

இலக்கியம்

நேரம் : 3 மணி] [மதிப்பெண் 100

குறிப்பு:— கீழ்க்காணும் வினுக்களில் வகைக்கொன்றினை விடுக. மதிப்பெண் எல்லா உட்பிரிவுகளுக்கும் சமம்.

I 1. திருநாவுக்கரசரை நீற்றறையி விட்டதையும் அதில் அவர் உய்ந்த விதத்தினையும் சேக்கிழார் கூறும் முறைப்படி விளக்குக.

2. "சொற் குறுதிக் கப்பர்" என்பதுண்மையாதற்கு மூன்று சான்றுகள் தருக.

3. தம்பியார் உளராக வேண்டும்என
வைத்த தயா
உம்பருல கணையவுறு நிலைவிலக்க
உயிர் தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்கா தனைத்துயிர்க்
கும்அருள் தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி
யார் இருந்தார்.

இச்செய்யுளில் காணப்பெறும் சிறப்பியல்புகளை விளக்குக.

4. திருநீற்றின் சிறப்புப் பற்றி •திருநாவுக்கரசர் புராணத்தில் கூறும் சான்றுகளில் இரண்டு தருக.

II 1. சம்பந்தர் தேவாரத்துக் காணும் செய்யுள் யாப்புச்சிறப்புகளுக்கு இரு சான்றுகள் தருக.

2. "தாக்கில் திருஞானசம்பந்தர்" சிறந்திருந்தமைக்கு மூன்று சான்றுகள் தந்து விளக்குக.

3. "மண்ணி னல்ல வண்ணம் வாழலாம்" என்ற திருப்பதிகம் எச்சூழ்நிலையில் எங்குப் பாடப் பெற்றதென்பதையும் அதன் சிறப்பினையும் விளக்குக.

4. சம்பந்தர் சற்புத்திர மார்க்கத்திற்குக் காட்டாயமைவதற்கு இரு சான்றுகள் தருக.

III 1. வாதவூரர் கனிவிற்கு ஏதாவது ஒரு திருவாசகச் செய்யுள் எழுதி அதில் அத்தன்மை மிளிர்தலை விளக்கி வரைக.

2. புணர்ப்ப தொக்க எந்தை என்னை யாண்டு
பூண நோக்கினாய்
புணர்ப்ப தன்றி தென்ற போது நின்னொ
டென்னொ டென்னிதாம்
புணர்ப்ப தாக அன்றி தாக அன்பு
நின்க ழற்கணே
புணர்ப்ப தாக அங்க ணாள புங்க
மான போகமே.

இச்செய்யுளில் காணும் சிறப்புக்களை விளக்கி வரைக.

3. அர்த்தநாரீச்சுர வடிவத்தை மாணிக்கவாசகர் போற்றுந் தன்மைய்யை விளக்கி வரைக.

4. சிவபுராணச் சிறப்பினைப்பற்றி நீவிர் அறிந்தவைகளை விளக்கி வரைக.

IV 1. "சாளர பாணி" என்றால் என்ன? இதைப்பற்றி நீவிர் அறிவதை வரைக.

2. திரைலோக்கிய சுந்தரம், கங்கை கொண்ட சோளேச்சுரம், தஞ்சை ராசராசேச்சுரம் ஆகிய பெயர் அமைப்புகளிலிருந்து நீவிர் அறிவன யாலவை? ஏதாவது ஒன்றினுக்கு ஒரு பாடல் காட்டி விளக்குக.

3. திருப்பல்லாண்டு பஞ்சபுரரணத்துள் ஒன்றாகச் சேர்க்கப் பட்டதின் இன்றியமையாமையை எடுத்தியம்புக.

——

சாத்திரம்

நேரம் : 3 மணி] [மதிப்பெண் 100

குறிப்பு:— எவையேனும் நான்கு வினாக்களை விட்டு விடுக. எல்லா வினாக்களுக்கும் மதிப்பு எண்கள் சமம்.

1. சிவஞானபோத முதற் சூத்திரத்தின் அதிகரணங்களாற் போந்த தொகைப் பொருள்கள் என்று சிவஞான சுவாமிகள் குறிப்பிடுவனவற்றை எழுதுக.

2. உயிர்கட்குப் புனருற்பவம் ஆகாமைக்கு வாதிகளான் எடுத்துக்காட்டப்பெறும் உவமையாது? அதனை

மெய்கண்டார் எங்ஙனம் மறுத்துப் பொருள் விளக்கம் செய்துள்ளார்? (அல்லது) 'அரவுதன் தோலுரிவு' முதலிய உவமைகள் எவ்வெவற்றை விளக்கப் போந்தன?

3. சிவஞான போதத்தின் ஏழாம் சூத்திரத்தினை எழுதி, அதன்கண் வரும் 'இருதிறன் அறிவு' என்னும் தொகைச்சொல் தொடர், எத்தனைவகைப் பொருளில் மயங்கிற்று என்பதனை விளக்கி எழுதுக.

4. 'அதுஇது என்ற அதுவல்லான்' எனத் தொடங்கும் சிவஞானபோத வெண்பாவினை எழுதி, அதற்குப் பொழிப்புரையும் இலக்கணக் குறிப்புக்களும் தருக.

5. முதற்காரணம் — துணைக்காரணம் — நிமித்த காரணம் என்பனவற்றைக் குறித்துச் சிவஞானசித்தியார் கூறுவது யாது? விளக்குக.

6. இறைவன் செய்யும் ஐந்தொழில்கள் யாவை? அவற்றை அவன் செய்தற்குரிய காரணங்கள் என்னென்ன? அருள்நந்தி சிவத்தின் சொற்களிலேயே வைத்து விவரிக்க.

7. "ஆர்ப்பாய காயம் தன்னை ஆன்மா நின்று ஆட்டும்" தன்மைக்குச் சிவஞான சித்தியார் கூறும் ஐந்து உவமைகளையும் முறையே பொருத்தி எழுதுக.

8. "நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய்" எனத் தொடங்கும் சித்தியார் செய்யுளை எழுதி, அதனுல் மறுக்கப்படும் மதவாதிகள் சிலரின் பெயர்களையும் குறிப்பிடுக.

9. "நிறுத்திடுவன் நினைந்த உரு நிமலன் தானே" என்பதனை விளக்க உமாபதிசிவம் கூறும் ஆறு காரணங்களையும் தருக.

10. "இறைவன் அலது உலகுக்கு உபாதானம் இல்லை" எனக் கூறும் மாயாவாதிகளை உமாபதிசிவம் எங்ஙனம் மறுக்கிறார்?

11. கன்ம மலத்தின் இலக்கணத்தினைச் சிவப்பிரகாசம் எவ்வாறு விளக்குகின்றது?

12. "பஞ்ச மலங்கள்" என்பன யாவை? அவற்றின் இயல்பினைச் சிவப்பிரகாசச் செய்யுள் கொண்டு சுட்டுக.

13. "மூவகை வினைகள்" யாவை? அவைகள் முறையே எவ்வெவ்வாறு கழியும் என்று சிவப்பிரகாசம் கூறுகின்றது?

14. "இது திருவெழுத்தின் ஈடு" என்று சிவப்பிரகாசம் தெரிவிப்பன யாவை?

உரை நடை

நேரம் : 3 மணி] [மதிப்பெண் 100

குறிப்பு:— எல்லா வினாக்களுக்கும் மதிப்பெண் சமம். ஏதாவது ஒரு வினாவை விட்டுவிடுக.

1. ஆசிரியர் மறைமலையடிகள் சைவ சித்தாந்த சமயக் கொள்கையில் கொண்ட பேரீடுபாட்டுக்கு இரு சான்றுகள் தந்து விளக்குக.

2. சிவஞான சித்தியார் என்னும் நூலின் பெருமைகளைச் சுருக்கி வரைக.

3. திருவள்ளுவர் மெய்யுணர்தலில் கூறும் சிறந்த சமயக் கருத்துக்களை விளக்குக.

4. "வடமொழிக் கடலும் தென்மொழிக் கடலும் நிலைகண்டுணர்ந்த முனிபுங்கவர் சிவஞான முனிவர்" என்பது எவ்வாறு உண்மை? விளக்குக.

5. நாவலர் பெருமான் எழுதிய பெரியபுராண சூசனத்தின் சிறப்பியல்புகளை எழுதுக.

இளஞ் சைவப் புலவர் தேர்வு

இலக்கணம்

காலம் : 3 மணி] [மதிப்பெண் 100

குறிப்பு : (1) ஒவ்வொரு வினாவிலும் ஒவ்வோர் உட்பிரிவை விடுக.

(2) எல்லாக் கேள்விகளும் சமமான மதிப்பெண் பெறும்.

1. (அ) நூற்கு எய்தலாகாக் குற்றங்கள் எவை?

(ஆ) ஆசிரியன் கற்பிக்கும் முறை எப்படி?

(இ) உயிரளபெடையாவன யாவை? அவற்றின் வகைகளை உதாரணத்தோடு விளக்குக.

(ஈ) பகுபதம் எத்தனை வகைப்படும்? விளக்குக.

(உ) செய்யுள் விகாரங்கள் எத்தனை வகைப்படும்? எடுத்துக் காட்டோடு விளக்குக.

2. (அ) உடம்படுமெய் என்றால் என்ன? அதுபற்றிய சூத்திரக் கருத்தை விளக்குக.

(ஆ) பின்வருவனவற்றுக்குப் புணர்ச்சிவிதி காட்டுக. உண்ணிய கொண்டான், முருட்டுக்கால், தாழம்பூ, பொற்றகடு, வேறீது.

(இ) வழக்கு, செய்யுள் என்னும் இரண்டனுள் வழக்காவன யாவை?

(ஈ) வினையெச்ச வாய்பாடுகள் யாவை? அவற்றுள் இரண்டுக்கு உதாரணங் காட்டுக.

(உ) அறுவகை வினாக்களையும் எண் வகை விடைகளையும் எடுத்துக்காட்டோடு விளக்குக.

3. (அ) செய்யுள் எத்தனை வகைப்படும்? தண்டியலங்காரத்திலிருந்து உதாரணங் காட்டுக.

(ஆ) பெருங்காப்பிய இலக்கணங்கள் யாவை?

(இ) வைதருப்பநெறி என்றால் என்ன? அதன் இயல்புகளை விளக்குக.

(ஈ) தீவகவணி, வேற்றுப்பொருள் வைப்பணி — இவற்றுள் ஒன்றின் உட்பிரிவுகளைக் குறிப்பிட்டு ஏதேனும் ஒன்றிற்கு உதாரணங் காட்டுக.

(உ) நுட்பவணி, ஒப்புமைக் கூட்டவணி, புகழாப் புகழ்ச்சியணி — இவற்றுள் இரண்டின் பொதுவியல்பை விளக்குக.

4. (அ) ஆர்வமொழியணி, பரியாயவணி, பரிவருத்தனையணி — இவற்றுள் இரண்டினை விளக்குக.

(ஆ) இருவகை அசைகளை எடுத்துக் காட்டோடு விளக்குக.

(இ) ஈரசையால் வரும் சீர்களின் தளைகளை விளக்குக.

(ஈ) குறளடி, அளவடி — இவற்றைப்பற்றிக் குறிப் பெழுதுக.

(உ) விளக்கந் தருக :— முரண்தொடை, செந் தொடை.

5. (அ) பொழிப்பு, கூழை, கீழ்க்கதுவாய் என்றால் என்ன? எடுத்துக்காட்டோடு விளக்குக.

(ஆ) நேரிசை, சிந்தியல் ஆகிய வெண்பா வகை களைப் பற்றிச் சிறு குறிப்புக்கள் எழுதுக.

(இ) அடிமறி மண்டில ஆசிரியப்பா, கட்டளைக் கலித்துறை, வஞ்சித்தாழிசை — இவற்றுள் இரண்டின் இலக்கணத்தை விளக்குக.

(ஈ) மருட்பா இலக்கணத்தை எழுதுக.

(உ) பின்வரும் பாடல் எப்பாவினத்தைச் சேர்ந்தது என்பதனைச் சீர்பிரித்துக் காரணத்தோடு விளக்குக.

பொன்னங் குன்றவன்
மின்னும் வாளவன்
மன்னன் றேழனே
முன்னி வந்தனன்.

இலக்கியம்

நேரம் : 3 மணி] [மதிப்பெண் 100

I கீழ்வருவனவற்றுள் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக:—

1. திருச்சீரலைவாயிலில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள முருகப்பெருமானின் தோற்

றத்தினை நக்கீரர் எங்ஙனம் விதந்து போற்றி யுள்ளார்?

2. "மெய்யுணர்தல்" என்ற அதிகாரத்தில் கூறப் பட்டுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

3. அன்புடைமை, அருளுடைமை—இந்த இரண்டு அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக் களில் காணக்கிடக்கும் ஒற்றுமை வேற்றுமை களைப் புலப்படுத்துக.

4. திருக்குறள் கருத்துக்களைச் சுந்தரர் கையாண்ட முறைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

5. சுந்தரர் தேவாரத்தில் காணலாகும் நகைச் சுவைக்கு இருசான்றுகள் தந்து விளக்குக.

6. முருகப்பெருமானின் திருமுகங்கள், திருக்கரங் கள் ஆகிய இவைகளின் செயல்களைக் குமர குருபரர் எங்ஙனம் விளக்கியுள்ளார்?

II கீழ்வருவனவற்றுள் மூன்று வினாக்களுக்கு விடை தருக:—

1. திருமுருகாற்றுப்படையின் துணை கொண்டு பண்டைத் தமிழ் மக்களின் சமயநிலையினைப் புலப்படுத்துக.

2. வள்ளுவர் வகுத்த வண்ணம் துறவிக்குரிய அறங்களை விளக்கி வரைக.

3. குமரகுருபரர் முருகப்பெருமானிடம் விடுத்த வேண்டுகோள்கள் யாவை ?

4. திருவள்ளுவர் தவத்தின் சிறப்பினையும் தவம் செய்வாரது உயர்வினையும் எங்ஙனம் விளக்கி யுள்ளார்?

5. அருணகிரியார் கந்தரனுபூதியில் உலகத்தார்க்கும் தமது நெஞ்சுக்கும் கூறிய அறிவுரைகள் யாவை?

6. கந்தரனுபூதியில் காணக் கிடக்கும் பக்திச் சுவையினைப் புலப்படுத்துக.

III கீழ்வருவனவற்றுள் யாதானும் ஒன்றிற்குப் பரிமேலழகர் கூறியுள்ள விளக்கவுரையினைக் குறிப்பிடுக.

1. இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள.

2. நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின்

IV கீழ் வரும் உவமைகளுள் எவையேனும் மூன்று எவைகளை விளக்க வந்தன? உவமப் பொருத்தத்தினையும் ஆராய்க:—

1. தீப்பட உருமிடித்தல்.
2. கணைகொடிது யாழ்கோடு செவ்விது.
3. பலவின் கண் ஈ.
4. முயல் வலை யானை.
5. இளம்பருதி நூறுயிரங் கோடி.

V கீழ் வருவனவற்றுள் மூன்றிற்கு இடம் சுட்டிப் பொருள் நயங்களையும் புலப்படுத்துக.

1. இன்னே பெறுதிநீ முன்னிய வினையே.
2. நீதான் ஒருசற்றும் நினைந்திலையே.
3. சான்றோர்க்குக் கொன்றுகும் ஆக்கம்கடை.

4. நீர் தமிழோடிசை கேட்கும் இச்சையாற்
காசு நித்தல் நல்கினீர்.

5. கந்திப் பொதும்பரெழு காரலைக்குஞ் சீரலைவா
செந்திப் பதிபுரக்குஞ் செவ்வேளே! [ய்ச்

——

சாத்திரம்

நேரம் : 3 மணி] [மதிப்பெண் 100

குறிப்பு:— எவையேனும் நான்கு வினாக்களை விட்டு விடுக. எல்லா வினாக்களுக்கும் மதிப்பு எண்கள் சமம்.

1. பஞ்சபூதங்களின் வடிவம், நிறம் பற்றி உண்மை விளக்கம் கூறுவதனை உணர்த்துக.

2. ஞானேந்திரியம், கன்மேந்திரியம் என்பன யாவை? அவை தொழிற்படும் முறையினைக் குறிப்பிடுக.

3. 'முத்தித் தலைவர்' என்று உண்மை விளக்கம் யாரைக் குறிப்பிடுகின்றது? அவர்தம் இயல்பினை விவரிக்க.

4. கடல் தண்ணீர், பசுவின்மலம் என்னும் உவமைகளால் திருக்களிற்றுப்படியார் விளக்கும் செய்திகள் யாவை?

5. தூலவுடம்பு, மூலவுடம்பு என்பன யாவை? (அல்லது) பிறவியறுத்தற்குத் தத்துவ விசாரமே ஏது என்பதனை எவ்வாறு திருக்களிற்றுப்படியார் உணர்த்துகின்றது?

சமாஜ வெளியீடுகள்

	ரூ.	பைசா
சைவ சமயச் சொற்பொழிவுகள்	2	00
ஞானியாரடிகள் நினைவுமலர்	1	00
முருகன் முந்நூல்	0	40
அறுபத்து மூவர்	0	06
வைர விழா மலர்	2	00
அறப்பயிற்சிமாலை	0	50
சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல—120 காரணங்கள்	0	50
திருமயிலையும் பூம்பாவையும்	0	50
முருக வழிபாடு அல்லது முருக தத்துவ அருள் விரத வழிபாடு	0	75
பிரதோஷ வழிபாடு	0	20
நான் நம்புவன சில	0	10
விநயாகர் வழிபாடு	0	20
கூட்டு வழிபாட்டுப் பாமாலை	0	20
திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி—பொன் விழா வெளியீடு	1	25
கந்தரனுபூதி—யந்திர உரையுடன்	1	25
சிவஞானபோதம்—தெளிவுரையுடன்	0	50

தபால்—ரயில் செலவு தனி.

"சித்தாந்தம்"—சிறந்த மாதப் பத்திரிகை

ஆண்டுச் சந்தா ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 50.

"சைவ சித்தாந்தம்"—ஆங்கில முத்திங்கள் வெளியீடு

ஆண்டுச் சந்தா ரூ. 5.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12, கீழ மாட வீதி, மயிலாப்பூர், சென்னை-4

முருகன் அச்சகம், சென்னை - 14

P 460

VOL 40 NO 15/12

5 Dec 1967

9-2-69

தாம்பரம் ச. நடேச முதலியார் கீ. இராமலிங்கனுர் எம்.ஏ., திருவாசகமணி K. M. பாலசுப்ரமணியம் ஆகிய பெருமக்கள் மணிவிழாத் தலைவரைப் பாராட்டிப் பேசினர். பின்னர் மணிவிழாத் தலைவர் உரையும் அம்பை சங்கரனுர் நன்றியுரையும் கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

பிற செய்திகள்

ஸ்ரீ மெய்கண்ட தேவநாயனுர் குருபூசை விழா சுசீந்திரம் திருவாவடுதுறையாதீனத் திருமடத்தில் நன்னெறி மன்றத்தார் சார்பில் திரு. சிவகுருநாதன் செட்டியார் அவர்கள் தலைமையில் 2–11–67ல் நிகழ்ந்தது. சைவப் புலவர்கள் சி. குமரேச பிள்ளை, நடேச பிள்ளை, பகவதிப் பெருமாள் பிள்ளை ஆகியோர் சொற்பெருக்காற்ற திருஞான சம்பந்த சுவாமிகள் வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

திருவருள் தவநெறி மன்றத்தின் சார்பில், வேலூர் (சேலம்) திருஞானசம்பந்தர் மடத்தில், 11–11–67 அன்று திருமுறைத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. தருமபுர ஆதீனப் பிரசாரகர் திரு. மருள்நீக்கியார் தலைமை தாங்கினுர். பொத்தனூர் திருமுறை மன்றத்தைச் சேர்ந்த பன்னிரு புலவர்கள் திருமுறை வாழ்க்கைக்குப் பயன்படும் முறையினை விளக்கினர்.

திருஞான சம்பந்தர் மடத்தில் ஞாயிறு தோறும் திருக்களிற்றுப்படியார் சாத்திர வகுப்பு புலவர் ப. மாணிக்கம் அவர்களாலும் பெரிய புராண வகுப்பு புலவர். அ வைத்தியலிங்கம் எம்.ஏ., அவர்களாலும் நடாத்தப் பெறுகின்றது. மக்கள் கேட்டுப் பயன் பெறுகின்றனர்.

சென்னை, குயப்பேட்டை சண்முக ஞானபுரம் தமிழ் வேத பாராயண பக்த ஜனசபையின் 55-ஆவது ஆண்டு திருநெறித் தமிழ் வேதத் திருமறை விழா 12–11–67 முதல் 19–11–67 முடிய சிறப்புற நிகழ்ந்தது. சமாஜப் பேரன்கள் பலரும் கலந்து சொற்பணி புரிந்தனர்.

15-11-67 புதனன்று சென்னை இந்து மது விலக்குச் சங்கத்தின் ஆதரவில் திருமூலநாயனர் விழா மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. திரு. வல்லை பாலசுப்பிரமணியம் பி.ஏ., அவர்கள் நாயனரது வரலாற்றினையும், திருமந்திரப் பெருமைகளையும் விளக்கி உரையாற்றினர். செயலாளர் திரு C. P. சுந்தரபாபு அவர்கள் நன்றியுரையுடன் விழா இனிது முடிந்தது.

புரசைத் திருநெறிக் கழக 81ஆம் திங்கள் வழிபாடு கொன்னூர் பெரியசாலை காசி விசுவநாதர் கோயிலில் 19-11-67 அன்று சிறப்புற நிகழ்ந்தது.

திருவாலவாய்ச் சைவ சித்தாந்த சபையின் ஆதரவில் சிவத்திரு. ஆறுமுக நாவலரவர்கள் 88ஆவது குரு பூசை 25-11-67 சனிக்கிழமையன்று சிறப்புறக் கொண்டாடப் பெற்றது. பல பெருமக்கள் கலந்து சொற்பெருக்காற்றி விழாவைச் சிறப்பித்தனர்.

நம் சமாஜச்செயற்குழு உறுப்பினர் வித்துவான் வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் இளைய திருமகனர் திருநிறை செல்வர் நம்பி ஆரூரன் எம்.ஏ., அவர்களுக்கும் திரு சு. ஐயம்பெருமாள் பிள்ளை அவர்கள் திருமகளார் திருநிறை செல்வி சாரதா அம்மையாருக்கும் 27-11-67 திங்கள் காலை திருவல்லிக்கேணி சீனிவாசப் பெருமாள் திருமண மண்டபத்தில் திருமணம் சிறப்புற நிகழ்ந்தது. சமாஜச் சார்பாக திருமண வாழ்த்து வாசித்துக் கொடுக்கப் பெற்றது.

புது மணமக்கள் நின்ற சொல்லராய் நீடு தோறினியராய் எல்லா நற்பேறுகளுமினிதுற்று என்றும் நன்று வாழ அருள் பாலிக்க அம்பலவாணரின் னடியிணைகளை வணங்கி வாழ்த்துகின்றோம். புது மணமக்கள் சார்பில் சமாஜத்திற்கு சமயக்காணிக்கையாக வரவு ரூ. (10-0) பத்தினையும் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப் பெற்றது.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras, by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.